பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 12 2024 **SUNDAY** 7 15 **AM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மாநிலங்களின் தலைமைச்செயலாளர்கள் மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று நிறைவுரையாற்றுகிறார்.

2. **Moldova** துணைப் பிரதமர் திரு. **Mihail Popsoi** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

3. இலங்கை அதிபர் திரு. அனுர குமார திசநாயகே, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து, இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்துகிறார்..

4. நாட்டின் வடமேற்கு மற்றும் மத்தியப் பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு கடும் குளிர் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி மும்பையில் இன்று நடைபெறுகிறது.

>>>><<<<

மாநிலங்களின் தலைமைச்செயலாளர்கள் மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று நிறைவுரையாற்றுகிறார்.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இந்த மூன்று நாள் மாநாட்டில், மாநிலங்களுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது, வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

தொழில்முனைவை ஊக்குவிப்பது, வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றில் சிறந்த நடைமுறைகளை பின்பற்றுவது உள்ளிட்ட அம்சங்கள் குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

நாட்டில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நடைபெற்ற இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 75 ஆண்டு கால பயணம் குறித்த சிறப்பு விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், இதற்கென நீண்ட விவாதம் நடத்தப்பட்டுள்ளதாகவும்,

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு இச்சட்டத்தை கொண்டு வருவதற்கான பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் கூறினார்.

நமது நாட்டின் ஜனநாயகம் உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பெண்கள் தலைமையிலான வளர்ச்சியில் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அரசியலமைப்புச் சட்டம் 75 முறை திருத்தியமைக்கப்பட்டதாக அவர் கூறினார்.

மதத்தின் அடிப்படையிலான இடஒதுக்கீடு என்பது அரசியல் சாசன சட்டத்தின் உணர்வுகளுக்கு எதிரானது என்று பிரதமர் குறிப்பிட்டார்.

நாட்டின் ஒருமைப்பாட்டு உணர்வை வலுப்படுத்துவதை நோக்கமாக கொண்டு, சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படுவதாக அவர் கூறினார்.

அண்டை நாடுகளில் உள்ள சிறுபான்மையினருக்கு குடியுரிமை வழங்கும் வகையில், குடியுரிமை சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

25 கோடி ஏழை மக்களை வறுமையின் பிடியிலிருந்து வெளிக்கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளுக்கு தமது தலைமையிலான அரசு முன்னுரிமை வழங்கி வருவதாக திரு. நரேந்திர மோடி கூறினார்.

புதிய இந்தியாவை கட்டமைக்கும் நோக்கில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் ஊழலை முற்றிலும் அகற்றுவது உள்ளிட்ட 11 தீர்மானங்களை பிரதமர் முன்மொழிந்தார்.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 75 ஆண்டு கால பயணம் குறித்த இந்த விவாதத்தில், பிஜேபி, காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி, சிவசேனா, ஐக்கிய ஜனதா தள் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்.

இந்த விவாதம் மாநிலங்களவையில் நாளை தொடங்கி, இரண்டு நாட்களுக்கு நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று சத்திஷ்கட் செல்கிறார்.

ராய்ப்பூரில் நடைபெறும் நிகழ்ச்சியில், அம்மாநில காவல்துறைக்கு, குடியரசுத்தலைவரால் வழங்கப்படும் காவல் இலச்சினையை அவர் வழங்குகிறார்.

ஒருமைப்பாடு, கண்ணியம் மற்றும் சிறந்த சேவையை அங்கீகரிக்கும் வகையில் குடியரசுத்தலைவரின் இந்த இலட்சினை அம்மாநில காவல்துறைக்கு வழங்கப்படுகிறது.

பின்னர், ஜக்தல்பூரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியிலும் திரு. அமித் ஷா பங்கேற்கிறார்.

>>>><<<<

ஒரே நாடு ஒரே தேர்தல் தொடர்பான இரண்டு மசோதாக்கள், மக்களவையில் நாளை தாக்கல் செய்யப்படுகின்றன.

சட்ட அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால் இந்த மசோதாக்களை தாக்கல் செய்கிறார்.

இந்த மசோதாவிற்கு மத்திய அமைச்சரவை கடந்த வியாழக்கிழமை அன்று ஒப்புதல் அளித்தது.

இதுதொடர்பாக, முன்னாள் குடியரசுத்தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் தலைமையிலான உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு

ஏற்றுக் கொண்டதை அடுத்து, இந்த மசோதாக்கள் தாக்கல் செய்யப்படுகின்றன.

முதல்கட்டமாக மக்களவை மற்றும் சட்டப்பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கும், அதற்கடுத்த 100 நாட்களுக்குள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்துவதற்கும் இந்த குழு பரிந்துரைத்துள்ளது.

>>>><<<<

மக்களின் நலன்களுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக பிஜேபி தலைவர் திரு. ஜெபி. நட்டா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகளை பிஜேபி மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்புச் சட்டம் குறித்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தெரிவிக்கும் குழப்பமான கருத்துக்களை களையும் வகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பதிலுரை அமைந்துள்ளதாக திரு. நட்டா கூறினார்.

>>>><<<<

இந்திய கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி, நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக இந்தோனேஷியா புறப்பட்டுச் சென்றார்.

அவரது இந்த பயணத்தின் போது, அந்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகளுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்துகிறார்.

அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **Sjafrie Sjmsoeddin,** ஆயுதப்படை தலைவர் ஜென்ரல் **Agus Subiyanto,** கடற்படை தளபதி அட்மிரல் மொஹமது அலி ஆகியோரையும் சந்தித்து பேசவுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு, கடல்சார் பாதுகாப்பு, கூட்டு ராணுவப் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>><<<<**

**Moldova** நாட்டின் துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான திரு. **Mihail Popsoi** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

அவரது இந்த பயணத்தின் போது, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம், கலாச்சார பரிமாற்றம், மக்கள் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அவர் ஆலோசனை நடத்துகிறார்.

>>>><<<<

இலங்கை அதிபர் திரு. அனுர குமார திசநாயகே, மூன்றுநாள் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

அந்நாட்டு அதிபராக பொறுப்பேற்ற பின், முதல்முறையாக அவர் இந்தியா வருகிறார்.

அவரது இந்தப் பயணத்தின் போது, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்துகிறார்.

பின்னர், புதுதில்லியில் நடைபெறும் வர்த்தக கூட்டம் ஒன்றில் பங்கேற்கும் அவர், இருநாடுகளுக்கும் இடையேயான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது குறித்தும், முதலீடுகளை ஈர்ப்பது குறித்தும் வர்த்தக

நிறுவன பிரதிநிதிகளுடன் விவாதிக்கவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்தியா – இலங்கை இடையேயான கலாச்சார பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ள புத்தகயாவிற்கும் திரு. அனுர குமார திசநாயகே செல்லவுள்ளார்.

>>>><<<<

ஜார்ஜியாவின் புதிய அதிபராக திரு. **Mikheil Kavelashvili** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அவர் இம்மாதம் 29ஆம் தேதி அதிபராக பதவியேற்கிறார்.

மொத்தம் 225 உறுப்பினர்கள் கொண்ட எலெக்டோரல் வாக்குகளில் 224 உறுப்பினர்கள் அவருக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அந்நாட்டு அரசியல் சாசனத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை அடுத்து, நேரடியாக அதிபரை தேர்ந்தெடுக்கும் முறை மாற்றப்பட்டு, புதிய நடைமுறை இந்த ஆண்டு அமலுக்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<

நாட்டின் வடமேற்கு மற்றும் மத்தியப் பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு கடும் குளிர் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர், லடாக், கில்ஜித், பல்டிஸ்தான், மொஹாபராபாத் ஆகிய பகுதிகளில் அடுத்த இரண்டு தினங்களுக்கு கடும் குளிர் தொடரும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

அஸ்ஸாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிஸோரம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் இரவு மற்றும் அதிகாலை வேளைகளில் கடும் பனிப்பொழிவு நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அந்தமான் நிகோபார் தீவுகளில் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் மேலும் கூறியுள்ளது.

>>>><<<<

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி மும்பையில் இன்று நடைபெறுகிறது.

இப்போட்டி, இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

>>>><<<<

ஆசிய கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

மஸ்கட்டில் நேற்று நடைபெற்ற போட்டியில் இந்தியா 3-1 என்ற கோல்கணக்கில் ஜப்பானை வென்றது.

இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில் இந்தியா - சீனாவை எதிர்கொள்கிறது.

>>>><<<<

சந்தோஷ் கோப்பை கால்பந்துப் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு மேற்குவங்கம் மற்றும் மணிப்பூர் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

ஹைதராபாதில் நேற்று நடைபெற்ற போட்டியில், மேற்குவங்க அணி 3-1 என்ற கோல்கணக்கில் ஜம்மு காஷ்மீர் அணியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் மணிப்பூர் அணி 1-0 என்ற கோல்கணக்கில் சர்வீசஸ் அணியை வென்றது.

>>>><<<<

சையத் முஸ்தாக் அலி கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் மும்பை அணி, மத்தியப் பிரதேச அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் நடைபெறும் இப்போட்டி மாலை மணி 4.30-க்கு தொடங்குகிறது.

>>>><<<<

ஒடிசா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இன்று நடைபெறும் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் ரித்விக் சஞ்சீவி, சகநாட்டு வீரரான தருண் மன்னப்பள்ளியை எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் தன்வி ஷர்மா, சீனாவின் **Cai Yan Yan-**ஐ எதிர்கொள்கிறார்.

**>>>>end<<<<**